24.03.2025 S.C.No.138 of 2017 P.W.14 – Ravi

(A3 absent and his absence condoned u/s 317 of Cr.P.C. petition filed and allowed. A1, A2, A4 to A6 present)

குறுக்கு விசாரணை தொடர்ச்சி தொடங்கிய நேரம் மதியம் 03.00 P.M.

**5 மற்றும் 6 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1ம் எதிரியின் தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக் கொள்கிறார். குறுக்கு விசாரணை தொடர்ச்சி

குற்ற எண் 140/2015 என்ற வழக்கில் நான்தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன் என்றால் சரிதான். அந்த வழக்கில் Kidnapping, Abduction என்ற சாராம்சம் கிடையாது என்றால் சரிதான். Kidnapping, Abduction இல்லா Woman missing case என்பதால் அது bailable offence ஆக இருக்கும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அந்த வழக்கு bailable offence என்பதால் அதை உதவி ஆய்வாளரே விசாரிக்கலாம் என்றால் Woman missing case–ஐ ஆய்வாளர்தான் பொதுவாக விசாரிப்பார்கள்.

இந்த Woman missing வழக்கு சாட்சி விசாரணையை நான் செய்தேன். புகழேந்தி, சரவணன் ஆகிய சாட்சிகளை சந்தேகத்தின் அடிப்படையில் பழனி கொடுத்த புகாரின் அடிப்படையில் நான் விசாரித்தேன். ஆனந்தன், கோபி, செந்தில், புகழேந்தி, சரவணன், பழனி ஆகிய நபர்களை நான்தான் விசாரணை செய்தேன் என்றால் சரிதான். பார்வை மகசரும் நான் தான் தயார் செய்தேன் என்றால் சரிதான். வழக்கு நாட்குறிப்பும் நான்தான் செய்தேன் என்றால் சரிதான்.

Non Bailable offence ஆக அந்த வழக்கு இருந்திருந்தால் வழக்கின் விசாரணையை மூத்த அதிகாரிகள் செய்திருப்பார்கள் என்றும் Bailable offence ஆக இருப்பதால் நான் விசாரணை செய்தேன் என்றால் சரிதான்.

காவல் நிலையத்தில் Woman missing வழக்கு தொடர்பாக ஷமீல் பாஷா வந்த விஷயத்தை நீதிமன்றத்திற்கு தெரியப்படுத்தினேனா என்றால் நீதிமன்றத்திற்கு தெரியப்படுத்தும் அதிகாரம் எனக்கு இல்லை. சாட்சி தானாக முன்வந்து காவல் நிலைய உயர் அதிகாரிக்கு தெரியப்படுத்தாக நீதிமன்றத்திற்கு அவர் தெரியப்படுத்துகிறார்.

Woman missing வழக்கு தொடர்பாக சாட்சிகளை விசாரிக்கும் அதிகாரம் எனக்கு இருக்கும்போது ஷமீல் பாஷா வந்ததை நீதிமன்றத்திற்கு தெரியப்படுத்தியிருக்க வேண்டும் என்றால் நான் மூத்த அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தியதால் நீதிமன்றத்திற்கு தெரியப்படுத்தும் அதிகாரம் எனக்கு இல்லை.

பாரா டியூட்டி பார்ப்பவர்கள் தனியாக ரெஜிஸ்டர் வைத்திருப்பார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பாரா மாற்றுப்புத்தகம் உள்ளது. அதில் நீதிமன்றத்திற்கு அனுப்பப்படும் நபர்களை மட்டுமே குறிப்போம். குற்ற எண் 140/2015 என்ற வழக்கு முதல் தகவல் அறிக்கை போடப்பட்ட அதே நேரத்தில் அந்த வழக்கு தொடர்பாக குறிப்புகளை ஜிடி டைரியில் நாங்கள் பதிவிடுவோம். அந்த விளக்கங்களை நாங்கள் அந்த ஜிடி டைரியில் பதிவிடுவோம். ஒரு வழக்கின் முதல் தகவல் அறிக்கை பதிந்தவுடன் அந்த வழக்கில் பங்கேற்கக்கூடிய காவல் நிலையத்தை சேரந்த அதிகாரிகள் எங்கு செல்கிறோம், யாரை பார்க்கிறோம் என்ற விவரங்களை நாங்கள் வழக்கு

நாட்குறிப்பில் (Police Case Dairy)–ல் பதிவிடுவோம் என்றால் சரிதான். நாங்கள் ஒவ்வொரு நாளும் காவல் நிலையத்தில் அதிகாரிகள் என்ன பணி என்பதை பொதுநாட்குறிப்பில் பதிவு செய்வோம் என்றால் சரிதான். ஆம்பூர் சேடோ டியூட்டிக்கு ஆய்வாளர் மார்டின் பிரேம்ராஜ் சென்றார் என்றால் சரிதான். சேடோ டியூட்டியில் வேறு யார் யார் இருந்தார்கள் என்று எனக்கு தெரியாது.

26.05.2015 அன்று இந்த வழக்கை பதிவு செய்த போது இந்த வழக்கில் என்னோடு ஒத்துழைத்த அதிகாரிகள் அனைவருடைய இருப்பை ஜிடியில் பதிவிட வேண்டும் என்றால் சரிதான். 26.05.2015 அன்று விசாரிக்கும்போது என்னுடன் காவல் நிலையத்தில் முத்துக்குமரன், சீனிவாசன், கங்காபாய் ஆகியோர் இருந்தனர். இந்த வழக்கை விசாரணை செய்து இந்த வழக்கின் கோப்பை ஆய்வாளரிடம் ஒப்படைத்ததாக சொன்ன விஷயத்தை பொதுநாட்குறிப்பில் நான் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

16.06.2015 அன்று என்னுடன் முத்துக்குமரன், சீனிவாசன், கங்காபாய் ஆகியோர் காவல் நிலையத்தில் இருந்தனர் என்றால் சரிதான். வழக்கு நாட்குறிப்பில் அவ்வப்போது நடக்கும் நிகழ்வுகளை பதிவு செய்து டிஎஸ்பிக்கு அனுப்புவோம் என்றால் சரிதான். அவ்வாறு ஒவ்வொரு நாளும் டிஎஸ்பிக்கு அனுப்பிய தகவலை பொதுநாட்குறிப்பில் பதிவிட்டிருக்கிறேன் என்றால் சரிதான்.

அந்த தகவலை நான் ஜிடியில் பதிவு செய்தேன் என்றால் சரிதான். 17.06.2015 அன்று பொலிரோ வாகனத்தில் YB மணிகண்டன், பாரா சீனிவாசன் ஆகியோரை அனுப்பினேன்.

பொலிரோ வாகனம் நிற்கும் பாலாற்றங்கரை பக்கம் ஒருவரை பார்த்து வரச்சொல்லி நான் அனுப்பிய நபர்கள் யார்யார் என்றால் சீனிவாசன் என்பவரும், YB அவர் பெயர் எனக்கு ஞாபகமில்லை. நந்தக்குமார் இருந்தாரா என்று எனக்கு நினைவில்லை.

17.06.2015 அன்று பாலாற்றங்கரையில் பொலிரோ வாகனம் அருகில் விசாரணை நடத்தியவர் யார் என்று எனக்கு தெரியாது. ஆம்பூர் சென்ட்ரி டைரியில் 17.06.2015 அன்று ஆய்வாளர் மார்டின் பிரேம்ராஜ் சேடொ டியூட்டியில் இருந்ததற்கான ஆதாரம் உள்ளது.

சிங்காரம் மற்றும் கலைச்செல்வன் ஆகியோருடன் ஆய்வாளர் மார்டின் பிரேம்ராஜ் காலை 09.00 மணியிளிருந்து மதியம் 01.10 வரை இருந்துள்ளார் என்பதை எ.த.சா.ஆ.12 ல் உள்ளது என்றால் அது ஒளிநகல் ஆவணம் என்பதால் அது பற்றி எனக்கு தெரியாது.

17.06.2015 அன்று ஆய்வாளர் பள்ளிக்கொண்டா காவல் நிலையம் வந்து ஷமீல் பாஷாவை விசாரித்தார் என்பது பொய் என்றால் சரியல்ல. 16.06.2015 மற்றும் 17.06.2015 ஆகிய தேதிகளில் ஷமீல் பாஷாவை ஆய்வாளர் விசாரிக்க வாய்ப்பில்லை என்றும் நான்தான் அவரை விசாரித்தேன் என்றால் சரியல்ல.

16.06.2015 மற்றும் 17.06.2015 ஆகிய தேதிகளில் ஆய்வாளர் வந்து ஷமீல் பாஷாவை விசாரித்தார். மார்டின் பிரேம்ராஜ் அன்றைய தினம் காவல் நிலையத்திற்கு வந்து விசாரணை செய்ததை ஜிடியில் பதிவு செய்தேனா என்றால் பதிவு செய்யவில்லை. 16.06.2015 மற்றும் 19.06.2015 ஆகிய தேதிகளில் ஷமீல் பாஷாவை விசாரணை செய்து அவரிடம் எழுதி வாங்கிக்கொண்டு நான் அவரை அனுப்பிவிட்டேன் என்றால் 19.06.2015 அன்று மட்டும் நான் அவரிடம்

எழுதிவாங்கிக்கொண்டு அனுப்பிவிட்டேன். மேற்படி இரண்டு தேதிகளில் நான் ஷமீல் பாஷாவை விசாரித்து எழுதி வாங்கிக்கொண்டு அனுப்பிவிட்டேன் என்ற தகவலை அனுமந்தன் என்ற தலைமை காவலர் சிபிசிஐடியிடம் சொல்லியுள்ளார் என்றால் 19.06.2015 அன்று நான் அனுப்பினேன். 16.06.2015 என்பது சரியல்ல.

HCP வழக்கில் சம்பந்தப்பட்ட காணாமல் போன பவித்ரா என்ற பெண்மணியை 19.06.2015–க்குள் உயர் நீதிமன்றத்தில் ஒப்படைக்க வேண்டும் என்று எங்களுக்கு உத்தரவு வந்தது. 19.06.2015 தேதி விசாரணைக்கு வந்த நான் விசாரணையில் மேற்படி பவித்ராவை கூட்டிப்போய் வீடு வாடகைக்கு எடுத்து தங்கவைத்தேன் என்ற தகவலை ஷமீல் பாஷா சொல்லியவாறு நான் கைப்பட எழுதினேன் என்பது உண்மைதான்.

கௌஷ் பாஷா ஷமீல் பாஷாவை நான் நல்ல முறையில்தான் அழைத்துச்செல்கிறேன் என்று என்னிடம் சொன்னதை நான் எழுத கௌஷ் பாஷா அதில் கையெழுத்து போட்டுவிட்டு ஷமீல் பாஷாவை அழைத்துச்சென்றார் என்றால் சரிதான். அ.த.சா.ஆ.3 ல் இரண்டாவது பக்கத்தில் உள்ள கைவிரல் ரேகை ஷமீல் பாஷாவினுடையது. கையில் வீக்கம் இருந்திருந்தால் கைவிரல் ரேகை வைக்க முடியாது என்றால் சரியல்ல. சிபிசிஐடி போலீசார் சொல்லிக்கொடுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Woman missing வழக்கில் இறுதி அறிக்கை தாக்கல் செய்தாகிவிட்டது. அந்த வழக்கில் பவித்ரா கண்டுபிடிக்கப்பட்டதால் அதில் மேல் நடவடிக்கை எதுவும் எடுக்காமல் வழக்கு முடிக்கப்பட்டது.

ஷமீல் பாஷா இறந்த பின்னர் அந்த வழக்கு சிபிசிஐடிக்கு மாற்றப்பட்டு சிபிசிஐடி விசாரித்தபோது நான் அதே பள்ளிக்கொண்டா காவல் நிலையத்தில் எஸ்எஸ்ஐ–ஆக பணியாற்றினேன். சிபிசிஐடி விசாரணையில் முதலில் யார் விசாரணை அதிகாரி என்றால் திரு.ஆனந்தகுமார் டிஎஸ்பி அவர்கள்.

ஆம்பூர் நகர காவல் நிலைய ஆய்வாளர் திரு. கோவிந்தசாமி அவர்களை ஷமீல் பாஷா இறப்பு தொடர்பாக பள்ளிக்கொண்டா காவல் நிலையத்தில் முதல் தகவல் அறிக்கை பதிய நியமித்தார்கள். குற்ற எண் 158/2015 வழக்கை அவர்தான் பதிந்தார். அது எந்த தேதியில் பதியப்பட்டது என்று எனக்கு நினைவில்லை. முதல் தகவல் அறிக்கை பதிந்த பின்னர் 01.07.2015 அன்று இந்த வழக்கு சிபிசிஐடிக்கு மாற்றப்பட்டது. இடைப்பட்ட காலத்தில் யார் அந்த வழக்கை விசாரித்தார் என்றால் எனக்கு நினைவில்லை. காரணம் நான் பந்தோபஸ்து பணியில் இருந்தேன்.

கைது செய்யப்பட்ட எதிரியை லாக்அப்–ல் வைப்பதற்கு ஆய்வாளரின் உத்தரவு வேண்டும். Non bailable offence–ல் கைது செய்யப்பட்ட எதிரியை லாக்அப்–ல் வைப்போமா என்றால் பொதுவாக நீதிமன்றத்திற்கு உடனடியாக அனுப்பிவிடுவோம். கால தாமதம் ஆகும் பட்சத்தில் அவரை லாக்அப்–ல் வைப்போம். Bailable offence இருக்கும்பட்சத்தில் சம்பந்தப்பட்ட கைதிகளை நீதிமன்றத்தில் ஒப்படைப்போம்.

டிஎஸ்பி தங்கவேல் கைது செய்தது தொடர்பாக மார்டின் பிரேம்ராஜ் சேடோ டியூட்டிக்கு சென்றார் என்றால் சரிதான். டிஎஸ்பி என்பவர் பள்ளிக்கொண்டா காவல் நிலையம் உட்பட நான்கு, ஐந்து

காவல் நிலையத்திற்கு பொறுப்பானவர் என்றால் சரிதான். டிஐஜியினுடைய உத்தரவுப்படி எஸ்பியும், எஸ்பியினுடைய நேரடியான உத்தரவின்படி டிஎஸ்பியும், டிஐஜி மற்றும் எஸ்பி அவர்கள் உத்தரவின் படி டிஎஸ்பி அவர்களும் தங்கள் ஆளுமைகுட்பட்ட காவல் நிலையங்களில் உள்ள காவல் நிலைய அதிகாரிகளை திருட்டு, செம்மரக்கடத்தல் போன்ற குற்றப்பிரிவுக்கு அனுப்புவது உண்டு.

ஆம்பூரில் டிஎஸ்பி அவர்கள் திருட்டு மற்றும் செம்மரக்கடத்தல் போன்ற வழக்குகளில் உபயோகப்படுத்தும் காவலர்களை பற்றிய குறிப்புகளை என்னால் பள்ளிக்கொண்டா காவல் நிலையத்தில் பதிவு செய்ய இயலாது என்றால் சரிதான். அதனால் எந்தெந்த காவலர்களுக்கு என்ன பணிகள் அமர்த்தப்பட்டன என்ற விவரம் எனக்கு தெரியாது. காவல் நிலையத்தை தாண்டி நடக்கும் நிகழ்வுகளை நாங்கள் ஜிடியில் குறிக்க முடியாது என்றால் சரிதான்.

ஷமீல் பாஷா இறப்பு தொடர்பான வழக்கு சிபிசிஐடி விசாரணைக்கு செல்லும் என்ற நிலையில் ஷமீல் பாஷா இறப்பின் காரணம் குறித்து ஏதேனும் தெரிந்துக்கொள்ள நான் முயற்சித்தேனா என்றால் இல்லை. ஷமீல் பாஷா மருத்துவமனையில் அட்மிட் ஆனது தெரியும். ஷமீல் பாஷா மருத்துவமனையிலிருந்து Absconding ஆனது எனக்கு தெரியாது.

ஆய்வாளர் திரு.மார்டின் பிரேம்ராஜ்–க்கும் இந்த வழக்குக்கும் எந்த தொடர்வும் இல்லை என்றால் சரியல்ல. ஆய்வாளர் திரு. மார்டின் பிரேம்ராஜ் இந்த வழக்கு சம்பவ காலத்தில் வேறு ஒரு சிறப்பு பணியில் இருந்தார் என்றும் ஷமீல் பாஷாவை Woman missing case –ல் நான்தான் விசாரணை செய்து அவரை 19.06.2015 அன்று நான் தான் Bindover

செய்தேன் என்றும் ஷமீல் பாஷா இறப்புக்கு நான்தான் காரணம் என்றால் சரியல்ல. 5 மற்றும் 6 எதிரிகளுக்கும் இந்த வழக்குக்கும் எந்த தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல. 5 மற்றும் 6 எதிரிகள் 1ம் எதிரியுடன் இந்த வழக்கு சம்பவ காலத்தில் செம்மரக்கடத்தல் சிறப்பு பணியில் இருந்ததால் அவர்களுக்கும் இந்த வழக்குக்கும் எந்த தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை– இல்லை**

**விசாரணை முடிவுற்ற நேரம் மாலை 05.05 மணி**

PERUMALSAMY MURUGAN

Digitally signed by PERUMALSAMY MURUGAN
Date: 2025.03.24 18:11:51 +0530